# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

## அ.வ.எண்.58/2005

## நாள்.20.06.2024

2024ம் ஆண்டு ஜூன் 20 ஆம் தேதி ராஜேஸ்கண்ணா என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி, உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

================================================================

| | |
|---|---|
| பெயர் = ராஜேஸ்கண்ணா | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

================================================================

**PW 3 மு.வி**

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் ச.கண்ணனூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ச.கண்ணனூர் பேரூராட்சி செயல் அலுவலர் சார்பாக சாட்சியம் அளிக்க அனுமதி கடிதத்துடன் வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ரசீதுகள் எங்கள் பேரூராட்சியில் கொடுத்த ரசீதுகளாகும். வா.சா.ஆ.15 ரசீது தவிர மேற்படி அனைத்து ரசீதுகளும் ராஜரத்தினம் பெயரில் கண்டுள்ளது. மேற்படி ரசீதுகள் கண்டுள்ள பகுதியின் பெயர் வாரி சந்து மேற்காகும். மேற்படி ரசீதுகளில் குறிப்பிட்டுள்ள பழைய கதவு எண்.23, புதிய கதவு எண்.49 ஆகும்.

ராஜரத்தினம் பெயரில் இருந்து 2011 – 2012 வருடத்தில் 21.09.2011 பெயர் மாற்ற எண்.17/2011–2012 மூலம் தலைவர் விஸ்வகர்ம தண்ணீர் பந்தல் என்ற பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 ஆவணத்தின் தலைவர் விஸ்வகர்ம மகாஜன சங்க சத்திரம் என்று கண்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.15 ரசீது எங்கள் பேரூராட்சியல் வழங்கப்பட்டுள்ளதாகும். நாங்கள் குடிநீர் கட்டணம் மற்றும் சொத்து வரி ஆகியவற்றிற்கு ரசீதுகள் வழங்குவோம். வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4, வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ரசீதுகள் சாட்சிய அழைப்பாணையில் கண்ட பகுதிக்கு வழங்கப்பட்டதாகும். வாரி சந்து மேற்கில் கட்டிடம், குடிநீர் இணைப்பு ஆகியவை உள்ளது. எனக்கு அழைப்பாணை வந்தபிறகு மேற்படி கட்டிடத்தில் யார் இருக்கிறார்கள் என்று நான் சென்று பார்க்கவில்லை. மேற்படி ரசீதுகள் சம்மந்தமாக மணிகண்டன் என்பவர் எங்கள் அலுவலகத்தை வந்து பார்க்கவில்லை. 2011 – 2012 வருடத்தில் 21.09.2011 பெயர் மாற்றம் சம்மந்தமாக தலைவர் விஸ்வகர்ம தண்ணீர் பந்தல், V.ராஜகோபால், த/பெ.வெங்கடாசல ஆச்சாரியார், எரக்குடி, துறையூர் என்பவர் மனு கொடுத்தார். மேற்படி மனுவை பெற்றுக்கொண்டு ஸ்தல ஆய்வு மேற்கொண்டு ரசீது வழங்கப்பட்டது. ஸ்தல ஆய்வு செய்ததாக என்னிடம் உள்ள ஆவணங்களில் எந்த குறிப்பும் இல்லை. ஆனால் ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த பிறகு தான் பெயர் மாற்றம் செய்வோம். எந்த தேதியில் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டது என்று என்னிடம் உள்ள ஆவணங்களில் எந்த குறிப்பும் இல்லை.

நீதிமன்ற உத்தரவு நகல் என்ற குறிப்பு என்னிடம் உள்ள ஆவணத்தில் உள்ளது. மேற்படி நீதிமன்ற குறிப்பு சம்மந்தமாக அசல் வழக்கு எண் என்று எதுவும் குறிப்பிடவில்லை. பொதுவாக பஞ்சாயத்திற்கு யார் சொத்துவரி செலுத்துகிறார்களோ அவர்கள் தான் சொத்தில் அனுபவத்தில் இருப்பார்கள். குடியிருப்பவரோ அல்லது உரிமையாளரோ வரி செலுத்தினால் வரி யார் பெயரில் உள்ளதோ அவர்கள் பெயரில் தான் வரி ரசீது போடுவோம்.

(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 27.06.2024ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)